# Geography

## யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் வளரச்சிப்போக்கு- கல்குடாப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**Supervisor**
*Dr. MIM. Kaleel,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. AHF. Nirosha,*
*Department of Geography,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் யுத்தகாலம் என்பது 1983-2009 ஆண்டுவரையான காலமாகும். இது இலங்கையின் இருண்ட காலப்பகுதி என்றே அழைக்க வேண்டும். இக்காலப்பகுதி இலங்கை வாழ்மக்களின் உயிரைப்பறித்து அவர்களை அங்கவீனர்களாக்கியதே ஒழிய அது எத்தகைய வெற்றியையும் கண்டு கொள்ளவில்லை. வளர்ந்து செல்லும் உலகின் வேகத்தோடு இலங்கையும் கைகோர்த்துக் கொள்ள தடுக்க மாத்திரமே அவ் யுத்தத்தினால் முடிந்தது. இக் காலப்பகுதியில் நாட்டை அபிவிருத்தி செய்ய எத்தகைய நடவடிக்கை மேற்கொண்டாலும் அது தோல்வியிலேயே முடிந்தது.

2009 ஆண்டு மாண்பு மிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களினால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து இலங்கையின் பல துறைகளிலும் சிறப்பாக வளரத்தொடங்கியது. அத்துறைகளில் முக்கிய வருமானம் ஈட்டும் துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. யுத்தகாலத்தின் பின்னர் இலங்கை நாடானது துரிதமாக அபிவிருத்தி கண்டு வருகின்றது. இவ் அபிவிருத்திகளில் பெரும்பாலானவை சுற்றுலாத்துறையினை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் ஏற்படும் அபிவிருத்தியில் சுற்றுலாத்துறைக்கு தனிப்பங்குண்டு. எனவே தான் இவ் ஆய்வானது கல்குடாப் பிரதேசத்தினை மையப்படுத்தி அங்கு மேற்கொள்ளப்பட்ட யுத்தத்திற்கு பின்னரான சுற்றுலாத்துறை அபிவிருத்திகளை எடுத்திக்காட்டியுள்ளது. இவ் ஆய்வானது இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியில் சுற்றுலாத்துறை வழங்கும் பங்களிப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

ஆய்வுப் பிரதேசமானது யுத்தத்தினால் பாதிப்புக்களை எதிர்கொண்ட ஓர் பிரதேசமாகும். யுத்தத்தினால் இப் பிரதேசத்தில் காணப்பட்ட சுற்றுலாத் தளங்கள் அதிகம் பாதிக்கப்பட்டன. இப் பிரதேசம் அதிகம் தமிழர்கள் காணப்பட்ட பகுதியாக காணப்பட்டமையால் ஏனைய சமூக மக்கள் அங்கு செல்வதற்கே அஞ்சினர். ஆனால் யுத்த முடிவுக்கு முன் மூடப்பட்டிருந்த கல்குடாவின் வாயில்கள் சுற்றுலாத் தொழிலின் அடிப்படையில் திறக்கப்பட்டது. உலக பிரசித்தி பெற்று இருந்த பாசிக்குட கடல் அலையை எல்லா மக்களின் கால்களும் தொட முடிந்தது. பல கொள்கைகளும் திட்டங்களும் கொண்டுவரப்பட்டு கல்குடாப் பிரதேசத்தை சூழ பல அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டது. யுத்த முடிவுக்குப் பின்னர் நான்கு வருடத்தின் பின்னர் இப்பிரதேசம் அசுர வளர்ச்சியடைந்தது. அரசும், இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபையும் இணைந்து இப்பகுதியில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வானது அளவு சார், பண்பு சார் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முதலாம் நிலை தரவுகளாக நேர்காணல், வினாக்கொத்து, அவதானம், கலந்துரையாடல் போன்ற முறைகள் பயணப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், அறிக்கைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது.வினாக்கொத்து, அவதானம்,

கலந்துரையாடல் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்க்கு spss மென்பொருள் பயண்படுத்தப்பட்டுள்ளதுடன், வரைபுகள் வரைவதற்கு ms excell பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு 5 அத்தியாயங்களாகப் பிரக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தலைப்புக்கள் ஆய்வின் நோக்கத்துடன் தொடர்பு பட்ட கருத்துக்களாக விளங்குகின்றது.

இவ்வாய்வில், யுத்தம் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திகள், அதற்கு தடையாக உள்ள பிரச்சனைகள், அதனை தீர்ப்பதற்க்கான ஆலோசனைகள் என்பன முன்வைக்கப்பட்டுள்ளது.